சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

காவலன்
சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | 4-50 |
| 3 மாத | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு தை மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 3-ம் இல.


# பரிசுத்ததந்தை இலங்கையினூடாகப் பிரயாணம் செய்வாரா?

1973-ம் ஆண்டில், அவுஸ்திரேலிய தேசத்தில் மெல்போர்ண்நகரில் 40-ம் சர்வதேசசற்பிரசாதமகாநாட்டைக் கொண்டாடப் பரிசுத்ததந்தை முடிவு செய்திருப்பதாக அறிகின்ரேம். அவ்வைபவத்துக்குப் பரிசுத்ததந்தை சமுகம் அளிப்பது சாத்தியமென வத்திக்கான் வட்டாரங்கள் கூறுகின்றன. 1964-ம், 68-ம் ஆண்டுகள் முறையே பம்பாய் நகரிலும் பொகோட்டா நகரிலும் நடந்த சற்பிரசாத மகாநாடுகளுக்கு அவர் சென்றிருப்பது மெல்போர்ண் நகருக்குச் செல்லக்கூடுமெனக் கூறுபவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றது. அவுஸ்திரேலியா செல்லும் வழியில் அவரது விமானம் இலங்கையிலுள்ள கட்டுநாயக விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கிச் செல்லக்கூடுமெனவும் கூறப்படுகிறது.

## வண. வலென்ரைன் உக்தின், O.M.I. சுவாமியாரின் மறைவு

யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் நீண்டகாலம் திருப்பணிபுரிந்து இளைப்பாறியிருந்த வண. வலென்ரைன் உக்தின், O.M.I. சுவாமியார் 30-12-69 இல் பிரான்சு தேசத்தில் உள்ள பொன்ற்மெயின் எனுமிடத்தில் காலமாயினுர் என்ற துயரசங்கதி கிடைக்கப்பெற்ரேம். சுவாமியார் மூலமாகக் கணக்கற்ற இகபர நன்மைகளைப்பெற்ற நாங்கள் அவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடக் கடவோம்.

## "மிஷனரிப்" பிரதேச மேற்றிராணிமாரின் விண்ணப்பம்

வறுமை மிக்கதேசங்களிலுள்ள மேற்றிராணிமார் சுமார் 50பேர் அண்மையில் வத்திக்கானில் ஒன்றுகூடி, விசுவாசப் பரப்புதல்சபைத் தலைவராகிய கருதினுல் அகாஜியானியன் தலைமையில் இப்பிரதேசங்களுக்குரிய விசேஷ இன்னல்களை ஆராய்ந்தனர், இப்போது விசுவாசப் பரப்புதல்சபையினரிடமிருந்துவரும் உதவி போதியனவாயில்லையென்றும், அதிலும் கூடிய உதவி செய்யப்படாவிடில் ஆரம்பிக்கப்பட்ட பலமுயற்சிகள் கைவிடப்படவேண்டி நேரிடுமெனவும் அறிவித்தனர். கருதினுலவர்கள் மேற்றிராணிமாரை ஒழிப்பு மறைப்பின்றி தமது குறைகள் யாவையும் வெளியிடுமாறு தூண்டிநின்ருர்;

# உலக வறுமையும் ஆங்கிலநாட்டுக் கிறிஸ்தவசபைகளும்

உலக வறுமையைத் தீர்க்கச் சகலதேச அரசாங்கங்களும் தமது வருமானத்தில் ஒருசத வீதம் ஒதுக்கிவைக்க வேண்டுமென்று சில வருடங்களுக்குமுன் பரிசுத்ததந்தை 6-வது சின்னப்பர் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஆற்றிய பேருரையில் கூறியிருந்தாரல்லவா? அவரது விண்ணப்பம் இன்னும் சித்திதரவில்லை. முன்னிலும் கூடியளவு சில தேசங்கள் பணஉதவி அளித்து வருகின்றது உண்மையேயாயினும் இன்னும்போதிய நிலைமை ஏற்படவில்லை. ஆகவே ஆங்கிலநாட்டில் சகல கிறிஸ்தவ சபைகளும் ஒருமித்துப் பெருமளவுமக்களின் கையொப்பங்கள் திரட்டி வருகின்றனர். மக்களின் அபிப்பிராயம் எப்படி இருக்கின்றது என்பதை ஆட்சிப்பீடத்தில் அதில் மார்ந்திருப்பவர்களுக்கு அறிவிப்பதேஇதன் நோக்கமாகும். ஏற்கனவே அரைக்கோடி கையொப்பங்கள் சேர்க்கப்பட்டுவிட்டன.

## வட அயர்லாந்தில் கத்தோலிக்கருக்கு நீதி

அண்மையில் வடஅயர்லாந்தில் கத்தோலிக்கருக்கும், புரொட்டஸ்தாந்தருக்குமிடையில் நடந்த கலகங்களின் பின், இன்று சமாதானநிலை ஏற்பட்டிருப்பதாகவும், நீதியாகக் கத்தோலிக்கரை நடத்திக் கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயம் பரவி வருவதாகவும் தோன்றுகின்றது. புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்புப்படையில் பல கத்தோலிக்கர்களுக்கு இடம் கிடைத்திருப்பதாகவும், அரசாங்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## இலங்கைத்தூதுவர் மேற்றிராணியாராகின்ருர்

மொன்சிஞ்ஞோர் லூசியானோ ஸ்ரெரூ அடிகளார் அண்மையில் இலங்கையிலே பாப்பரசரின் தூதுவராக உயர்நியமனம் பெற்றதை நேயர்கள்அறிவர். அத்துடன் இவருக்கு மேற்றிராணியார் பதவி அளிக்கப் பாப்பரசர் முடிவுசெய் திருக்கின்ருர், வத்திக்கானிலேயே இவருக்கு மேற்றிராணித்துவ அபிஷேகம் எதிர்வரும்மாசித்திங்கள் 1ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்றது.

# இது அயோக்கியம்

துப்பாக்கிகளும், போர் விமானங்கள் முதலியனவும் சண்டை செய்யும் நாடுகளின் இருசார்பார்களுக்கும் விற்றுப் பணம் சேகரிக்கும் அடாத வேலையில் இறங்கி நிற்கும் வல்லரசுகளைப் பரிசுத்ததந்தை சென்ற வாரம் அளித்த பகிரங்கப்பேட்டியில் கடுமையாகக் கண்டித்துப் பேசினுர். இவ்வல்லரசுகள் பிறரின் துன்பத்தில் பணம் ஈட்டப் பார்ப்பது அயோக்கியமாய் இருக்கிறது என்றும் உணவுக்கே திண்டாடும் இந்நாடுகளின் அற்ப பணத்தை யுத்த தளபாடங்களில் செலவு செய்யப்பண்ணுவது அடாத செய்கையென்றும் வலிமையாகக் கண்டித்தார்.

## பாக்கிஸ்தான் அமலோற்பவ தியாகிகளை அழைக்கின்றது

பாக்கிஸ்தானில் தேவனுடைய இராச்சியம் பரவுதற்கு அறிகுறிகள் இருக்கின்றன. அண்மையில் இலங்கையிலிருந்து "கிறிஸ்தியன் பிறதர்ஸ்" என்னும் சந்நியாச சபையினர் பலர் சென்று அங்கு பலபள்ளிக்கூடங்களை நடத்திவருகின்றனர். மேலும் குருமாருடைய தேவையும் அங்கு உண்டு. லயிலாப்பூர் என்னும் மேற்றிராசனத்தில் சுமார் 25,000 கத்தோலிக்கர் உளர். குருமார்தொகை மிகக்குறைவு. அப்பிரிவு மேற்றிராணிமார் இலங்கையிலுள்ள அமலோற்பவ தியாகிகளின் உதவியை நாடி இலங்கைத் தலைவருக்கு அமலோற்பவசபைக் குருமாரை அங்கு அனுப்பவேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிருர்.

# நைஜீரியாவில் யுத்தம் முடிந்தது

சென்ற வருடங்களாக நைஜீரியாவில் நடந்து வந்த உள்நாட்டுக்கலகம் சென்ற வாரம் முடிவடைந்துவிட்டது. நைஜீரியாவிலிருந்து பிரிந்துவிடவேண்டுமென்று பயபிரு என்னும் பிரிவு கேணல் ஓயூக்குவு என்பவர் தலைமையில் போராடிவந்தது. அதன் பயனுகப் பயபிரு பிரிவில் பெரும் பிணிகளும், பஞ்சமும், சாவும் தாண்டவமாடின. எனினும் விடாப்பிடியாக யுத்தம் நடந்துவந்தது. அல்லற்பட்ட பகுதிகளுக்குச் சர்வதேச தர்மஸ்தாபனங்கள் மனிதாபிமான பான்மையில் தம்மால் கூடிய உதவிகளை அளித்து வந்தன. ஈற்றில் நைஜீரிய அரசாங்கம் ஜெயித்துவிட்டது. பயபிரு மக்களின் துன்பங்களை அதிகரிக்கப் பண்ணுத முறையில் நைஜீரிய அரசாங்கம் போரை நடத்தி வந்தது. இப்போரை நிறுத்த வேண்டுமெனப் பரிசுத்ததந்தை பலமுறைகளிலும் இரு பகுதிகளுக்கும் விண்ணப்பித்திருந்தார். ஈற்றில் அப்பகுதியில் சமாதானம் நிலவிவருவது பரிசுத்ததந்தைக்கும், சமாதான விரும்பிகள் யாவருக்கும் பெரும் ஆறுதல் அளித்திருக்கின்றது. வெற்றியில் பெருமனத்துடன் நைஜீரிய அரசாங்கம் நடந்து வருகின்றது. ஐக்கியநாடுகளின் பொதுக்காரியதரிசி யூ. தாண்ட் நிலைமையை நேரிற் பார்த்துவரப் பயபிரு செல்கின்ருர்.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு

பண்டிகைக் காலம் என்றால் பரிசுகளுக்குக் குறைவில்லை. புகைவண்டியிலே பரிசுப் பார்சல்கள்—தபாற்கந்தோரிலே பரிசுப் பொதிகள், கண்பர்கையிலே பரிசுப் பொட்டணங்கள். அன்பர்க்கும் நண்பர்க்கும் அனைவரும் வழங்கி மகிழ்வர். அன்பை எண்பிக்க தகுந்த சாதனம் பரிசு. நாம் ஒருவரில் கொண்டுள்ள அன்பைக் காட்டும் வெளியடையாளம் பரிசு.

மனுக்குலமீதுகொண்ட மட்டற்ற அன்பினால் தமது மகனை மானிலத்தார்க்குப் பரிசாகத் தந்தார் பரமபிதா. இதுவரையும் எவரும் பெற்றிருக்க முடியாத மகத்தானபரிசு! கடவுள் உலகை எவ்வளவாக நேசித்தாரென்றால் தமது ஏக மகனையே தந்தார். இதைவிட வேறு பரிசும் உலகில் உண்டோ?

பரிசாக நமக்குக் கிடைத்த பாலகன் இவ்வுலகிலே வாழ்ந்து உன்னத போதனைகளை நமக்களித்து இருளிலே மண்டிக் கிடந்த மானிலத்தார்க்கு ஒளியானார். இந்த ஒளியின் வழியிலே நாம் நடந்தால் நமக்கு ஒரு பரிசு தரக்காத்திருக்கிறார். இவ்வுலகிற்கடுத்த பரிசல்ல—நண்பால நமக்களிக்கப்படும் அழியும் பரிசல்ல. அன்பரின் அன்பளிப்பு (பரிசு) இன்றோ நாளையோ அல்லது சில வருடங்களிலோ அழிந்தொழிந்து போம். ஆனால் நித்தியத்துக்கும் அழியாத பரிசு ஒன்று நமக்குக் காத்திருக்கிறது—இல்லை நமக்கென நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அமலன் அன்புப்பாதை வழியே நாம் நடந்துசென்றால் அந்தப் பரிசு நமக்குக் கிடைப்பது நிச்சயம்.

இந்த அழியாப் பரிசைப் பெறுவதே எமது நோக்கமாயிருக்க வேண்டும். இதுவே நமது புத்தாண்டுத் தீர்மானமுமாயிருக்கட்டும். பரிசைப் பற்றிக் கூறினேன். அது என்ன பரிசு என்று கூறவில்லையே. நான் கூறுமுன்னே அனைவரும் அதைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அதுதான் நித்தியசீவியம்—மோட்சம் முத்தி என்று நாம் கூறும் இடம். இவ்வுலக வாழ்வை நீத்தபின் நமக்கெல்லோருக்கும் இப்பரிசுகிடைக்க வேண்டுமென விரும்பி எனது புத்தாண்டுப் பரிசாக இந்தப் பரிசை (கட்டுரையை) அனைவர்க்கும் அளிக்கிறேன்; ஏற்றுக்கொள்ளுவீர்களாக.

இ. பேர்னுட்



# பல தேசங்களில்

**அமெரிக்கா :** அதிசய ஆடை: வெளிச்சத்துக்கு ஏற்றபடி நிறம் மாறக்கூடிய துணி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர் அமெரிக்காவில். இத்துணியில் பெண்கள் ஆடைகள் அணிந்தால் வெளிச்சம் சீதோஷ்ணம் என்பவற்றிற்கேற்றபடி நிறம் மாறும். ஆபிசில்பச்சை ஆடையுடன் இருந்தால் வெளியே வந்ததும் நீலமாக மாறிவிடும்.

**ஜப்பான் :** தேயிலையில் இருந்து தேனீர் தயாரிப்பது போல் மல்லிகைப் பூவிலிருந்து மல்லிகைப்பூ நீர் தயாரித்து பால் கலந்து சாப்பிடுகின்றனர் ஜப்பானியர். ஜப்பான் ஹொட்டல்களில் இது அதிகம் கிடைக்கும்.

**கோளா :** இங்கு சில இடங்களில் மிகப்பெரிய தேங்காய்கள் கிடைக்கின்றன. 14 ருத்தல் வரை நிறையுள்ள தேங்காய்களும் இங்கிருக்கின்றனவாம்.

**ஆஸ்திரேலியா :** உலகிலே மிகவும் பலம் வாய்ந்த கிரிக்கட் கோஷ்டி இங்குதான் இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இது மேலும் பலமுள்ளதாகிவிடும். அப்போது அவர்களை எவரும் தோற்கடிக்க முடியாது.

**அமெரிக்கா :** இங்குள்ள ஒவ்வொரு மனிதனும் சராசரியாக ஒரு நாளைக்கு 75ரூபா சம்பாதிக்கிறான்.

**சுவீடன் :** எந்தக் குடும்பத்தில் என்ன காரியம் நடைபெற்றாலும் மலர்களின் அலங்காரம் பிரமாதமாக இருக்கும். மலர் அலங்காரத்தில் அதிக பணத்தை இந்நாட்டு மக்கள் செலவு செய்கின்றனர்.

**பிரிட்டன் :** பிரிட்டனில் ஒருவர் இறந்து விட்டால் அதை ஒரு டாக்டரே நிச்சயப்படுத்த வேண்டும். அதன் பின்புதான் அடக்கத்துக்கான ஏற்பாடுகள் நடைபெறும். டாக்டரின் முடிவைத்தான் அரசினர் ஏற்பர்.

**இந்தோனேஷியா :** இத்தேச மக்கள் இராமாயணத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். அரசாங்கத்தின் ஆதரவுடன் இராமாயண உலக மகாநாடு ஒன்றைக்கூட்டவிருக்கின்றனர்.

காலம் சென்ற லூதர்கிங்கின் வாழ்க்கை படமாக்கப்பட்டுள்ளது. அவரின் பிறந்த தினத்தன்று அமெரிக்காவில் உள்ள 300 நகரங்களில் 1000 தியேட்டர்களில் ஒரே நேரத்தில் திரையிடுகின்றனர்.

சேகரிப்பு இ. பே.

---

## இதோ! வந்துவிட்டது.

திருமறைக் கலா மன்றத்தினர் தயாரித்து அளித்த "கன்னிபெற்ற கடவுள்" என்னும் வானொலி இசை உரை நாடகச் சித்திரம்.

விலை சதம் : 50.

கிடைக்குமிடம் :
அர்ச் சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

# அன்னல் காந்தியும் புனித வாழ்க்கையும்

மற்றப் பெரியோர்களின் வாழ்க்கையைநினைக்கும்போது "அவர்கள் எங்கே? நாம் எங்கே? நாம் அவர்களைப்போல் ஆகமுடியாது. அவர்களுக்கு இறைவன் அருள் செய்தார். அதனால் அவர்கள் உயர்ந்தார்கள். கடவுள் கனவில் வந்து அருள் செய்த காரணத்தால் இன்னார் உயர்ந்தார். நேரில் வந்து கடவுள் ஆட்கொண்டமையால் இன்னார் அருள் நிலை பெற்றார். பிறக்கும்போதே இன்ன அற்புத வல்லமையோடு பிறந்தமையால் இன்னார் இப்படி வாழ முடிந்தது. நாம் என்ன செய்வது? நாம் அவர்கள் சென்ற நெறியில் செல்ல முடியாது; அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை நமக்குக் கிட்டாது" என்ற எண்ணங்களே தோன்றும். ஆனால், காந்தியின் வாழ்க்கையில் இதற்கு இடம் இல்லை. நம்மைப்போல் குறைகளோடு பிறந்தார்; முயன்று முயன்று குறைகளைப் போக்கிக்கொண்டார். நம்மைப் போல் புலன்களுக்கு அடிமையாக வாழ்ந்தார்; படிப்படியாகப் புலன்களைவென்றுவென்று வீரரானார். நம்மைப்போல் துன்பங்களுக்கு நடுவே, குழப்பங்களுக்கு நடுவே நொந்தார். மெல்ல மெல்ல உரம் வளர்ந்து உயர்ந்தார். நம்மைப்போல் இல்வாழ்க்கை வாழ்ந்தார். உள்ளத்தூய்மையால் பற்றற்ற பெருந்தன்மையோடு உலகத் தொண்டுசெய்தார். நம்மைப் போல் அழியும் உடல்பெற்று வாழ்ந்தார்; ஆனால், அது மறைவதற்குமுன் அரியபெரிய செயல்களைச் செய்து முடித்தார். ஆகையால், அவர் சென்ற நல்வழியைப் பின்பற்றினால் நாமும் உரம்பெற முடியும்; உயர்வு பெற முடியும் என்ற நம்பிக்கையே நமக்குத் தோன்றுகிறது. அவருடைய வாழ்க்கையை அவரே எழுதி வைத்துள்ள பெருந்தொண்டு உண்மையை மாசுபடுத்தாமல் காக்கின்றது. அதன் பயனாக அவரைப்பற்றிப் பொய்களைப் புனைந்து கற்பிக்கமுடியவில்லை. அற்புதங்களை நுழைத்து எட்டாநிலையில் ஒதுக்க முடியவில்லை. குற்றங்குறைகளையும் படிப்படியான முயற்சிகளையும் இடர்கள் சூழ்ந்த தொண்டுகளையும் கண்டு ஊக்கம்பெறுகின்றோம். முயற்சிக்கு ஏற்ற கூலியாக ஆற்றலும் பெறுகின்றோம். படிப்படியாக மாசற்ற தூய வாழ்க்கை வாழ முடியும் என்ற நம்பிக்கையும் பெறுகின்றோம். எவை அழிந்தாலும் அறம் அழியாது. அறமே வாழ்க்கைக்கு அடிப்படை என்ற தெளிவும் பெறுகின்றோம்.

— வரதராசன்

---

## அச்சுவேலி

அச்சுவேலி, கன்னியர் மடத்தில் ஆறு வருடங்கள் சிரேஷ்ட தாயாராகக் கடமையாற்றி இளைப்பாறும் சங். தாயார் எவெறில்டா அவர்கட்கு அச்சுவேலி, புனித தெரேசா பாடசாலைப் பழைய மாணவர் சார்பில் எமது உளம் கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்பின் அன்னை எவெறில்டா எமக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டுகின்றோம். அவவின் முயற்சியால் எமது பாடசாலை மிகஉயர்ந்தநிலையை அடைந்துள்ளதென்பது வெள்ளிடைமலை. எமது உள்ளங்கள் அவவின் அரும்பெரும் சேவையைப் பாராட்டுகின்றது. அவவின் அன்புமொழியாலும், பார்வையாலும் நன்மையடைந்த உள்ளங்கள் எத்தனை. தியாகத்தின் தன்மையிலே, பொறுமையின் புதுமையிலே ஒவ்வொரு சிறாரினதும் நன்மையைக் கருதி எம்மைச் சேயென நடாத்தினர். தாயிற்கோர்தாயாய், ஆசிரியர்க்கோர் தீபமாய் விளங்கினு. அவவை விரும்பாத உள்ளங்களும் உள்ளதோ? சாதிமத பேதமின்றி ஒருகுல மக்களாக, ஒரு கூட்டமாகக் கட்டிவிட்ட அவவின் சக்திதான் என்னே! சங். எவெறில்டா அன்னை மட்டுநகருக்கு மாற்றலாகிப் போகவிருக்கும்செய்திகேட்டு அச்சுநகர் முழுவதுமே கலங்குகின்றது. அன்பின் அன்னை எவெறில்டாவை யாம் என்றும் மறவோம். அவவின் அன்புததும்பும் உள்ளத்தைக் கல்லாக்கி எம்மை விட்டேகப்போகின்று. எங்கள் இன்ப துன்பங்களிலே பங்குபெறும் அன்பு அன்னை சிரேஷ்டதாயாராயிருந்து ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டிச் செல்லுமிடமெங்கும் சீர்பெற்றோங்க வல்ல பரனை வேண்டிநிற்கின்றேம்.

— கிருபர்

* * *

## கஹாவத்தை

பிற மதத்தினர் மத்தியில் சொற்பபேர் கத்தோலிக்கராய் இருந்த பொழுதிலும் அவர்களின் உதவியோடு கஹாவத்தைக் கத்தோலிக்கர்கள் தமது நத்தால் பெருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். 23-ம் தேதி கஹாவத்தை அரசாங்க வைத்திய சாலையில் சிறுவர்களுக்கென 'நத்தால்மரம்" நிறுவி, நோயாளிச் சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, அச்சிறுவர்களை மகிழ்வித்தனர். அத்துடன் விசாரணைப் பங்கைச் சேர்ந்த தோட்டங்களுக்குச் சென்று "கரோல்" பாடி, கத்தோலிக்க சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். அத்தருணம் சிறுவர்களின் சிரிப்பொலியுடன் நத்தால் பப்பாவைக் கண்டு பயந்த பாலர்களின் அலறல் ஒலியும் குழுமிய மக்களைக் களிப்பில் ஆழ்த்தியது. பங்குக்குருவால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சியுடன் தோட்டத்து மக்கள் சமய வேறுபாடின்றித் தங்களது கலை நிகழ்ச்சிகளைக் கொண்டு அனைவரையும் மகிழச்செய்தது பாராட்டத்தக்கது. ஒவ்வொரு தோட்டங்களிலும் இவ்வுற்சவம் சிறப்பாக நடைபெற்றது

# அன்பு கனிந்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற நீர்த்துளிகளைச் சொரிய எமது பாவங்களைத் தீர்த்து எம்மை இரட்சித்தாய்" எனப் பண்பாடி மகிழ்ந்தார்.

தேவ அன்னையின் திருமுகம் நோக்கித் தேவசுபாவத்தோடு விளங்கும் இத்திருக்குமாரன் இத்தரையில் இஸ்ரயேலரின் மகிமையாக, பூவிற் புறசாதியினர் பிரகாசம்பெற்று விளங்கும் ஒளியாக வந்தார்; இவராற்சிலரோ கேடுறுவர்; சிலரோ உயிர்பெறுவார்; அவனியில் அகங்காரங் கொண்ட பகைவர் எய்யும் அம்புகளுக்குக் குறிபோலாகி உள்ளம் மிகவருந்துவார்; புண்ணிய மலர்களால் அழகுற விளங்கும் உமதுள்ளம் புண்படுத்தப் பட்டுத் துயருறத் துன்பமெனும் வாளாயுதம் உமது இதய மலரை ஊடுருவச் சோர்வுற்றுத் துயர்க்கடலில் மூழ்குவீர்" எனச் சிமியோன்முனிவர் மொழிந்தார்.

அத்தருணம் அன்னம்மாள் என்னும் கன்னிகையும் தேவ ஆலயம்சென்று திவ்வியபாலனின் திருவடிகளில் மலர்களைத் தூவிப் பணிந்து மிக்க ஆனந்தமடைந்து தேவ அன்னையையும் சூசைமாமுனிவரையும் வாயாரவாழ்த்தி நின்றார்.

சிமியோன் முனிவர் பல்லுயிர்க்கும் உயிரளிக்கவந்த கனியமுதம் உன்னுதரத்திருந்தே உலகினில் உதித்தது ஆதலால் நீர் நீடூழி வாழ்கவென்று தேவ அன்னையைப் புகழ்ந்து வாழ்த்தினர்.

தேவதாயும் சூசைமாமுனிவரும் திவ்விய பாலனைப் பரம பிதாவுக்குப் பரிவுடன் காணிக்கை செலுத்தி இரு புறாக்களை ஈடுசெய்து மீட்கும்போது ஆலயத்தமர்ந்திருந்த அனைவரும் அன்பு கனிந்த அமலனின் காணிக்கையை அகந்தனில் நினைந்து மிக்க ஆனந்தமடைந்தனர். புடமிடப்பட்ட பொன்னைப்போன்று நம்மிதய மலரும் என்றும் சுடரொளி வீச அதனை இறைவனுக்கே அர்ப்பணித்துப் பேரின்ப வாழ்வினைப் பெரும் புண்ணியச் செயல் புரிந்தே தேடுவோம்.

சீயோனே! உன் சிந்தை மலர இதயமனையைச் சீருற அலங்கரிப்பாய். கிறீஸ்து தேவ இராசாவைக் கீர்த்தனைகள் பாடி வரவேற்பாய். எப்பொழுதும் கன்னிகையாம் மாமரியாய் இப்புவியிற் புது ஒளியாம் மகிமையுறும் மன்னவனை ஒப்பில்லாக் காணிக்கையாய் உவந்தளிக்கும் அப்பொழுது சிமியோன் அச்சேய்தன்னைச் சிரக்கரங்களிலேந்தித் தப்பில்லா வாழ்வுக்கும் சாவுக்கும் கர்த்தா இவரே என்று கூறும் பாக்களைப் பாடுவோம்.

---

தேவமாதாசபைச் சகோதரிகளின் உதவியினலேயே. 24-ம் தேதி இப்பங்கைச் சேர்ந்த 28 தோட்டக் கத்தோலிக்கரும், ஏனைய கத்தோலிக்கரும் இராப் பூசையில் பங்குபற்றினர். பூசையின்பின் விடியும்வரை ஆலயத்தில் தங்கியவர்கள் ஆடிப்பாடிக் களிப்புற்றனர்.

— செல்வி சி. சி. ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை மன்னிப்பீர்களா அம்மா ?

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒருநாள் பேர்னாச்சியோ அடிகளிடம் அலெஸ் வந்தான். அலைந்துதிரியும் இத்தற்காலிக வாழ்க்கைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட எண்ணுவதாகக் கூறினான். எங்காவது ஒரு சந்நியாசமடத்தில் ஊழியக்காரனாகப் பணியேற்க விரும்பினான். அனஸ்டோ நகரத்திலுள்ள கப்புச்சின் துறவிகள் அவனை ஏற்றுக்கொண்டனர். மடாதிபர் அலெசுக்குப் பிரதம ஊழியனான முர்னெற்றோவுக்கு உதவும்பணியைத் தந்தார்.

முர்னெற்றோவுக்கு இது பிடிக்கவில்லை. வயதுமுதிர்ந்த தன்னை எங்கே வேலையால் விலக்கிவிடுவார்களோஎன அஞ்சினான். சிலதினங்கள் கழிந்தன. தனது சேமிப்புப் பணமான 4,000 லயர் நாணயங்களையும் காணவில்லையென முர்னெற்றோ மடாதிபரிடம் முறையிட்டான். தனது படுக்கையின் அடியில் அந்த நாணயங்களை வைத்திருந்ததாகவும் தன்னுடன் அலெஸ்மட்டுமே அந்த அறையில் வசிப்பதாகவும் கூறினான்.

அலெஸ் அக்குற்றத்தை மறுக்கவே மடாதிபர் வேறு வழியின்றிப் பொலிசுக்கு முறையிட்டார். பொலிசார் அவனைத் தம்முடன் அழைத்துச்சென்று விளக்கமறியலிலிருத்தினர். பதினைந்துநாட்கள் கழிந்தன. **தவறுதலாக உன்னைச் சிறையிலடைத்து விட்டோம். கிழவன் உன்னை அகப்படுத்த முயற்சித்து விட்டான். தயவு செய்து நடந்தவற்றை மறந்துவிடு** எனக்கூறி பொலிஸ் அதிபர் அலெசை விடுதலை செய்தார்.

மேலும் அவனை மடத்தில் வைத்திருப்பின் தொழிலாளிகளால் அலெசுக்கு இடையூறு விளையலாமென மடாதிபர் கருதினார். அலெஸ் பேர்னாச்சியோ சுவாமியாரிடம் திரும்பிச் சென்றான். சிலதினங்களின் பின்னர் அப்ருசி மலையடிவாரத்திலுள்ள ஆஸ்கோலி கிராம கப்புச்சின் துறவிகளிடமிருந்து அலெச்சாந்திரோவுக்கு அழைப்பு வந்தது. மேற்படி ஆச்சிரமத்தில் பூந்தோட்டங்களையும் மந்தை வளர்ப்பதையும் மேற்பார்வை செய்யும் அலுவல் அலெசுக்குத் தரப்பட்டது. இந்த தினசரி பூசைக்குச் சமூகந்தர அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. நெடுநாளாகத் தேடிய அமைதியையும் பெற்றவனானான்.

1947-ம் வருடம் சித்திரைத் திங்கள் 27-ம் நாளில் மரியாவுக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் தரப்பட்டது. மூன்றுவருடங்கள் கழிந்தன. 1950-ம் ஆண்டு ஆனித்திங்கள் 23-ம் நாளில் மரியா புனிதையாக அர்ச்சியசிட்டர்கள் வரிசையில் பிரகடனப் படுத்தப் பட்டாள். உலகின் நாலாபக்கங்களிலுமிருந்து வந்துகுவிந்த சனவெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமைகண்டு இப்பிரகடன வைபவம் இராயப்பர் மகாலயத்தின் சதுக்கத்தில் நடாத்தப்பட்டது. 80 வயது நிரம்பியவராக அசுந்தா அம்மையார் தள்ளுவண்டியில் கொண்டுவரப்பட்டார். அவரின் பக்கமாகத் திருத்தந்தை 12-ம் பத்திநாதர் சென்று, **"அம்மா! உங்கள் புதல்வி ஒரு சின்னச் சம்மனசாயிருந்தாள். அவளைப் பரிசுத்தம் பரிமளிக்கும்வாழ்க்கைப் பாதையில் நடாத்திச் சென்ற தாங்களும் இத்தருணத்தில் பாராட்டுதற் குரியர்"** என வாழ்த்தியபோது அங்கு குழுமியிருந்த பக்தர் குழாம் பேரொலிசெய்து ஆரவாரித்தது.

இராயப்பர் மகாலயத்தில் அன்று கூடியவர்களனைவரும் அலெசையும் அங்கு காணலாமென நினைத்து ஏமாந்தனர். ஆம், அலெஸ் அங்கு வரவில்லை. கப்புச்சின் மடத்திலுள்ள தனதறையில் வானொலி ஒன்றின் முன்பாக முழந்தாளிட்டவண்ணம் தன்னால் கொல்லப்பட்ட மரியாவின் புனிதப் பிரகடனச் சடங்குகளைக் கண்ணீருகுத்த வண்ணம்கேட்டுக்கொண்டிருந்தான்.

ஒருநாள் மடத்துக் கோவிலைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்தான் அலெஸ். அவனிடம் ஒரு தந்திச்செய்தியைக் கொண்டு வந்தனர். **அன்னை ஆபத்தான வருத்தமாய் இருக்கிறாள். உன்னைச் சந்திக்க விரும்புகிறாள் — ஈர்சிலா.** எனத் தந்தி கூறியது. தாமதமின்றி புறப்பட்டுச் சென்றான். ஆயின் அசுந்தாவின் உயிரற்ற சடலத்தையே அவனால் காணமுடிந்தது.

அசுந்தாவின் மரணத்தால் அதிர்ச்சியடைந்தவனானான் அலெஸ். சிறுவயதில் அவனது அன்னை மரிக்க, அசுந்தாவே அவனுக்குத் தாயன்பு காட்டி வளர்த்துவந்தாள். அவன்பால் மிக்க பரிவு காட்டி வந்தவள் அவள். இந்நிலையில் அசுந்தாவின் மரணத்துக்கு முக்கியத்துவம் தந்த பத்திரிகைச் செய்திகள் அலெஸ் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டதாகக் கொட்டை எழுத்துக்களில் செய்திகளை வெளியிட்டன. ஒரு பத்திரிகை அலெசின் இருப்பிடத்தையும் விபரமாகத் தந்தது.

இதனால் தினசரி ஏராளமானோர் மடத்துவாயிலில் அலெசைத் தரிசிக்குமாறு கூடினர். எனவே, அலெஸ் மகரெட்டாவிலுள்ள துறவிகளிடம் அனுப்பப்பட்டான். இன்றும் அந்த மடத்திலேதானே தபமுயற்சிகளில் தன்காலத்தைக் கழித்தவண்ணம் மனந்திரும்பிய இந்த ஊதாரிப்பிள்ளை காணப்படுகிறார். இப்போது அவரால் கருமமாற்ற இயலாது. அண்மையில் கண்ணில் நடாத்தப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னால் பார்வையும் குறைந்துவிட்டது. தலையிலும் வழுக்கை விழுந்துவிட்டது. எந்நேரமும் அவரது கையில் ஒரு செபமாலை காணப்படுகிறது. கடந்தகாலத்தை முற்றாக மறந்தவராக மோட்ச

— சாமுவேல் பெனடிக்ற் —

"அமைதி பொங்கும் இல்லம் அது 'ஆண்டவன் வாழும் இல்லம்'"
"ஓடம் அமைதியான நதியிலே ஓடும்; அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்."

# அமைதி அளிக்கும் அமலன்

அமைதி! அமைதி! என்று அலைகிறான் மனிதன்; நிம்மதி! நிம்மதி! என்று நிலைகொள்ளாமல் திரிகிறான் மனிதன்; அமைதியினூடே உதித்தெழும் கதிரவனைக் காண்கிறான்; தானும் அமைதி அடைய முயல்கிறான். படிக்கும்போது அமைதியை ஆசிக்கிறான்; உண்ணும்போது அமைதியை விரும்புகிறான்; வேலைத்தலத்தில் அமைதியைத் தேடுகிறான்; வீட்டில் அமைதியை எதிர்பார்க்கிறான். தன் குடும்பவாழ்வில் அமைதிக்காக அலைகிறான். இன்னும் அவன் தன் உள்ளத்தின் அமைதியைப் பன்மடங்கு அவாவுகின்றான்.

இவ்வாறு மனிதன் தேடும் அமைதி எங்கே? அவன் அடையத் தடிக்கும் அமைதியின் இருப்பிடம் எங்கே? அவன் கண்டடைய ஆசிக்கும் முழு அமைதி எங்கே? எங்கே?

ஆம், அவன்தேடும் அமைதி — அவன் அடைய விரும்பும் அமைதி இறைவனிடம்—எல்லாம்வல்ல பரம்பொருளிடம் நிறைந்துள்ளது. அமைதியின் உருவம் அவர்; அமைதியின் நிறைவு அவர்; அமைதியின் எல்லை அவர்; அமைதியின் உறைவிடமும் அவர்.

"ஆதியிலே கடவுள் இருந்தார். உலகமோ வெறுமையாய் இருந்தது. அமைதி எங்கும் நிறைந்து இருந்தது."

"உண்டாகட்டும்" என்றார் கடவுள். உலகம் உண்டானது என்கிறது திருமறை நூல். அமைதியின் கண் ஒலித்தது இவ்வார்த்தை. நாம் காணும் வையகமும், அதில் வதியும் உயிரினங்களும் வந்தன கொடிப்பொழுதில். ஈற்றில் மனிதன் படைக்கப்பட்டான். அமைதி தரும் வையகத்தில் சாந்தி நல்கும் இப்பூவுலகில் மனிதன் வாழ்ந்தான். அமைதியாக, இன்பமாக, ஒற்றுமையாக, அன்பாக அவன் வாழ்ந்தான். அந்த அமைதி, இன்பம், மகிழ்ச்சி நிலைக்கவில்லை. அமைதி அழிந்தது; இன்பம் தொலைந்தது; மகிழ்ச்சி மறைந்தது. மனிதன் கடவுளை அவமதித்தான். அவரது அன்புக் கட்டளையை மீறினான். பாவத்தில் வீழ்ந்தான்; பாவத்தைச் சுமந்தான்; வாழ்வை இழந்தான். அத்தோடு அவனது அமைதியும் தொலைந்தது. மனிதன் அமைதியின்றி, இறைவனின் அருளின்றி, அன்பு வாழ்வு இன்றி அவனியில் அலைந்தான்.

அமைதியின் உறைவிடமாம் அன்பிறைவன் அவனிக்கு அமைதி நல்க முன்வருகின்றார்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் யூதேயா என்னும் நாட்டில் பெத்லேகம் என்னும் சிற்றூரில் "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும், மண்ணுலகில் அவர் தயவு பெற்றவர்க்கு அமைதியும் ஆகுக" என்ற வாழ்த்துப் பாடல் ஒலிக்கிறது.

இதோ, மானிடர்க்கு அமைதி நல்க பரமன் வந்துவிட்டார். அமைதியின்றி நலிந்த மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்த, சாந்தி அருள, அமைதி வழங்க இதோ தோன்றிவிட்டார். அன்னைமரிக்கு அமலனாக, தந்தை சூசைக்கு வளர்ப்புமகனாக அவனியில் அவதரித்துவிட்டார். "கிறீஸ்து" என்ற காரணப் பெயர் கொண்டு, "யேசு" என்ற புனித நாமம் பூண்டு தரணியில் பிறந்துவிட்டார்.

"வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார்" (அரு. 1 : 14).

வார்த்தை என்றால் என்ன? மனதில், நமது அறிவில் கருத்துக்குவியல்கள் நிறைந்துள்ளன. ஒரு விடயம் பற்றி முதலில் மனதில் கருத்தரிக்கிறோம். பிறகு அதை வார்த்தையாக வெளியிடுகிறோம். அப்படியே, பிதா தன் அறிவிலிருந்து கருத்தரிக்கப் பிறக்கும் ஆள்தான் "சுதன்" (வார்த்தை) எனப்படுவது ஆகவே, அவரைப் பிறந்தவர் என்கிறோம்.

இந்தத் தேவ ஆள் (சுதன்) தன் தேவத்தன்மையுடன் ஒரு மனிதத்தன்மையை எடுத்துக் கொண்டார். ஆள் தேவஆள் மாத்திரம்தான். மனித ஆள் அவரிடம் இல்லை. அவர்தான் மானிலம் தழைக்க, விண்ணகம் மகிழ, நானிலத்தோர் அமைதிபெற, விண்ணவர் மகிழ்ந்து இசைபாட இம்மண்ணிற்குவந்த விமலன் கிறீஸ்துநாதர் மாந்தரின் மன அமைதியையும், உளச்சமாதானத்தையும் நாடினார்.

பாவிப் பெண்ணை மன்னித்தார்; "சமாதானமாய்ப் போ" என்றார்.

"என் சமாதானத்தை உங்களிடம் விட்டுச்செல்கிறேன்; என் சமாதானத்தில் நிலைத்து நில்லுங்கள்" என்று திருவாய் மொழிந்தார்.

உயிர்த்த பின் "உங்களுக்குச் சமாதானம்ஆகுக" என்று கூறித் தம்அப்போஸ்தலர்களை வாழ்த்தினார்.

இவ்வாறு கிறீஸ்து அண்ணல் மக்களின் அமைதியை சமாதானத்தைப் பெரிதும் விரும்பினார். இவ்வுலகிற்கு சமாதான தூதவராகவே வந்தார்; அமைதி தரும் அமைதி தெய்வமாக வந்தார்; அவர் பிறப்பால் வானகம் மகிழ்கின்றது; வையகம் இசைபாடுகின்றது. நாமும் இப் பொன்னாளில் அமைதி தரும் அன்புக் கடவுளை உளமார, வாயார வாழ்த்தி, நாவாரப்பாடிப் பண் இசைப்போம்.

**கன்னித் தாயின் மடியிலே**
**கருணைத் தந்தை வடிவிலே**
**தவழும் புனித குழந்தைக்கு**
**தெள்ளு தமிழின் சுவையிலே**
**தெரிந்து இசைப்போம் உலகிலே.**

— ச. வில்பிறெட் —

பேரின்பத்தை எதிர்நோக்கியவராவாழ்கின்றார் இந்தமுன்னாள் கொலைகாரர்.

(மனந்திரும்பிய பாவி என்ற நூலில்இருந்து தொகுக்கப்பட்டது)

# விசுவாசம்

— பாக்கியம் —

விசுவாசம் ஒரு கொடை. நம்பிக்கை, தேவசிநேகத்தைப் போன்றதே இதுவும் ஒன்று. கடவுள் நமக்கு இனாமாக அளிப்பது இது.

நான் ஒரு கிறீஸ்தவன். கிறீஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன். கிறீஸ்தவ வாழ்வைப் பெற்றுக் கொண்டவன். கோடானுகோடி மக்களைப்போல் நானும் கடவுளை அறியாது, அவரைப் புறக்கணித்து வாழலாம். அஞ்ஞானத்தில அமிழ்ந்திருக்கலாம். ஆனால் நான் அப்படிப் பிறக்கவில்லை. காரணம் என்ன? கடவுளின் கருணை.

நான் கிறீஸ்தவனாகப் பிறக்க வேண்டுமென்பது கடவுளின் சித்தம். நான் கிறீஸ்துவின் ஒளியைப்பெற வேண்டுமென்பது அவருடைய அவா.

மற்றவர்களுக்குத் தராததை ஏன் எனக்குத் தந்தார்? திருமுழுக்கு, உறுதிப் பூசுதல், பச்சாத்தாபம், தேவநற்கருணை இவையெல்லாம் எனக்கு அளிக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க குடும்பம், கத்தோலிக்க சூழ்நிலை, குருமார் இவர்களெல்லாம் எனக்குக் கொடுக்கப் பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் நான் பெற்றுக் கொள்ள என்ன தகுதி வாய்ந்தவன்?

"ஆண்டவரே, தேவரீர் என் வீட்டில் எழுந்தருள நான் தகுதியற்றவன். ஆனால், ஒரு வார்த்தைமட்டும் சொல்லியருளும்" என்று செந்தூரியனுடன் நாமும் எமது விசுவாசத்தை வெளிப்படுத்துவோம்.

இவ் விசுவாசத்தைத் தந்த கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். அவரையே எமது வாழ்வின் மையமாகக் கொள்வோம். அவருக்காகவே என்றும் வாழ்வோம்.

இவ்விசுவாசம் நம்மில் வேரூன்ற என்றும் மன்றாடுவோம். சோதனைகள் வரும்போது நாம் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க இறைவனை என்றும் பிரார்த்திப்போம்.

அஞ்ஞானத்தில் அமிழ்ந்திருக்கும் மக்களும் கிறீஸ்துவின் ஒளியைப்பெற விசுவாசம் என்னும் கொடையை அவர்களும் அடைய என்றும் மன்றாடுவோம். நாம் பெற்ற கொடையை இவ்வையகமும் பெற என்றும் வேண்டிக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகப் புயலிடையே! ...

கடிகாரத்தில் மணி ஐந்து முறை ஒலித்தது. ஜெயா எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள். சன்னலைத்திறந்து விட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். பொழுது விடியவில்லை. அவளுக்கு இரவில் துணையாகத் தங்கவரும் மங்களம் அத்தை எழுந்து வாயிற்கதவைத் திறந்துகொண்டே வெளியே போய்க் கொண்டிருந்ததைக் கண்டாள். " அப்பாவும் போய்விட்டாரே!...... இனிமேல் அதிகாலையில் எழும்ப வேண்டிய அவசியமில்லையே!... " எண்ணியவாறு திரும்பவும் சுருண்டாள் படுக்கையில். ஆம் அவள் அப்பா அவளைத் தன்னந்தனியனாக விட்டுவிட்டு மறுவுலகம் நாடிவிட்டார் எட்டு நாட்களின் முன். பிறந்த நாளிலேயே அன்னையைப் பறிகொடுத்தவள் அபலை ஜெயா. தன்னை வளர்த்து ஆளாக்கிய அப்பாவைக் கடந்த எட்டு வருடமாகப் படுக்கையில் வைத்தே பராமரித்த அவளுக்கு தந்தையின் பிரிவில் உலகமே வெளிச்சோடிப் போய்விட்டது. தனிமை, சோர்வு அவளை வாட்டிவதைத்தது. ஏழரைமணிக்கு எழுந்தாற்போதும். சாப்பாட்டை முடித்துக்கொண்டு புறப்பட்டால் 9 மணிக்கு பாடசாலைக்குப் போய்விடலாம். படுக்கையில் உடம்பைச் சார்த்திய அவளுக்கு நித்திரையே பிடிக்கவில்லை. மறுகணம் அவள் ஆசையோடு அக்கா என்று அழைக்கும் ரவியின் நினைவு எழுந்தது.

"ரவி அவள் சொந்தத் தம்பியே அல்ல. அன்றொரு நாள். படுக்கையில்கிடந்த தந்தைக்கான அலுவல்களை யெல்லாம் முடித்துவிட்டு பாடசாலை சென்றுகொண்டிருந்தாள் ஜெயா. பெருந் தெருவைக் கடந்தபின் பனைமரங்களடர்ந்த ஓர் ஒற்றையடிப் பாதை வழியாக அரைமைல் தூரம் சென்றால்தான் அவள் பாடசாலையை அடையலாம். அந்த வழியாக அவள் நடந்து கொண்டிருக்கையில் எதிரே வந்துகொண்டிருந்தான் சந்திரன். சில நாட்களாகவே ஜெயாவைச் சுற்றி வட்டமிட்டலைந்த அந்தப் புலியைக் கண்டதும் கிலி கொண்டாள் ஜெயா. தன்னைக் கல்யாணம் செய்யும்படி ஆயிரம் தடவை கெஞ்சியும் மதியாத அவளை தனிமையில் பலாத்காரம் செய்ய முயன்றான் அந்தக் கயவன். பாவம் ஜெயா!... இறைவா!... யேசுவே!...... மாதாவே!... ஓலமிட்டாள் எங்கிருந்தோ வந்தான் ரவி. மடக்கினான் சந்திரனை. ரவியின் அடிகளைத் தாங்க முடியாத சந்திரன் ஓட்டமெடுத்தான். ரவி ஜெயாவை நோக்கினான். நடுங்கிய நிலையில் நின்றுகொண்டிருந்த ஜெயா, " தம்பி!... கடவுள்தான் உங்களை அனுப்பினார்; எனது இதயம் கனிந்த நன்றிகள் " என்றாள் கண்ணீர் பொங்க. தன்னை அன்போடு தம்பி என்றுரைத்த ஜெயாவை நோக்கி, " அக்கா நீங்கள் தன்னந்தனி இவ்வழியாக வருவது சரியேயல்ல " என்று அக்கறையோடு கூறினான். அவள் கஷ்டங்களைக் கேட்டறிந்தான். முன்பின் அறியாத ஜெயாவுக்கு ஒரு தம்பியாகவே மாறிவிட்டான். அன்றிலிருந்து இன்றுவரை ஆயிரமாயிரம் உதவிகளைச் செய்துவந்திருக்கிறான். அப்பாவின் பிரிவில் கூட அவள் தனிமையின் துயரைத் தீர்த்து ஆவன புரிந்தவன் அவள் அருமைத் தம்பி ரவியேதான்.

* * *

கடிகாரத்தில் மணி 12 முறை ஒலித்து ஓய்ந்தது. பாலர்களரிச் சிறுமிகள் உணவுப் பார்சல்களை எடுத்துக் கொண்டு ஓடினர் சாப்பாட்டு அறைக்குள். ராஜி மட்டும் வகுப்பில் உட்கார்ந்திருந்ததை அவதானித்தாள் ஜெயா. "ஏம்மா! சாப்பிடப் போகவில்லையா?"

"இல்லை" என்றாள் ராஜி.

"ஏன்?"

"சாப்பாடு கொண்டுவரவில்லை ரீச்சர்."

"ஏன் கொண்டுவரவில்லை?"

"அதுவா?...வந்து...எங்க அப்பா அம்மா இரண்டுபேருமே மூன்றுமாதத்துக்கு முன்னால் ஒரு விபத்திலே செத்துப் போயிட்டாங்க. வீட்டிலே அண்ணாதான் சமைத்துப்போட்டு ஆபீஸ்போவார். இரண்டுநாளா அவருக்குக் காய்ச்சல் ... அதனாலே!..." இழுத்தாள் ராஜி. ஜெயாவின் மனம் வேதனையுற்றது. ராஜியை அழைத்துப்போய் விடுதியில் உணவுபெற்றுக் கொடுத்தாள். மூன்றுநாட்கள் ஜெயாவின் செலவில் ராஜிக்குச் சாப்பாடு பலே ஜோர். நாலாம் நாள் காலை. ராஜியின் கையில் பிடித்தபடி ஜெயாவிடம் வந்தான் ராஜியின் அண்ணா. "ரொம்ப நன்றி ரீச்சர். ராஜியின் உணவுச்செலவுக்கான பணத்தைப் பெற்றுக் கொள்கிறீர்களா?" என்று நீட்டினான். ஜெயா வாங்கத் தயங்கினாள்.

"பரவாயில்லை! ..."

"அண்ணா! ரீச்சர் ரொம்ப நல்ல ரீச்சர். அவவுக்கும் அப்பா அம்மா இல்லையே. நம் வீட்டே கூட்டிப் போவோமே!" என்று ஆரவாரித்தாள் ராஜி.

"போக்கிரி சும்மாயிரு" செல்லமாகத் தட்டினான் பாஸ்கர்.

ஆனால், ராஜியின் பேச்சு இரு இளம் உள்ளங்களையும் இணைத்தது. ஓரிருவாரங்கள் ஓடின. காதல் கனிந்தது. பாஸ்கர்—ஜெயா ஜோடிகளாயினர். ஜெயாவின் உடன் பிறந்த தம்பி ரவிக்கோ பரமானந்தம். தானே முன்னின்று செலவுசெய்து மிகக் கோலாகலமாக நடத்திவைத்தான் திருமணத்தை. ஒருவாரகாலத்தில் புதுமண ஜோடிகளிடம் விடைபெற்றுப் புறப்பட்டான் இங்கிலாந்துக்குத் தன் மேற்படிப்பைத்தொடர. அண்ணியின் அரவணைப்பில் இன்புற்று வாழ்ந்தாள் ராஜி.

* * *

கடிகாரத்தில் மணி நான்கு முறை ஒலித்து ஓய்ந்தது. "ஜெயா!" என்று கூப்பிட்டவாறே உள்ளே நுழைந்தான் பாஸ்கர். "என் ஆபீஸ் சிநேகிதன் சந்திரன் வந்திருக்கிறான். தேநீர் கொண்டுவருகிறாயா? என்றான். தேநீர் சிற்றுண்டியை ஏந்தியவாறு வெளியேவந்த ஜெயா திடுக்கிட்டுப் பின்வாங்கினாள் சந்திரனைக் கண்டதும். ஆம்!... சிற்றின்ப வேட்கையுடன் அவள்பின்னே அலைந்துதிரிந்த சந்திரன்தான் அவன். தேநீர்த்தட்டை வைத்துவிட்டுப் பயந்துபோன முகத்துடன் உள்ளே நுழைந்த ஜெயாவின் நிலையைப் பாஸ்கரும் கவனிக்கத் தவறவில்லை. "ஓ!...இவவா! வாழவிடுவனா இவளை!" மனதுள்ளே கறுவியபடியே நண்பனுடன்உரையாடிவிட்டு வீடு திரும்பினான் சந்திரன். அடுத்தநாள்ஆபீசில்ஜெயா—ரவியின் தொடர்புபற்றி இல்லாததும் பொல்லாததும் இட்டுக்கட்டி சந்தேகப் புயலை பாஸ்கர் உள்ளத்தில் உருவாக்கி தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டான். எதையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கத்தவறிய பாஸ்கர் ஆவேசமே உருவாய்த் திரும்பினான் தன் வீட்டுக்கு. துரதிர்ஷ்டவசமாக இங்கிலாந்திலிருந்து திரும்பிய ரவி, தன் வீட்டிலிருந்து வெளியேறிச் செல்வதையும் கண்ணுற்றான். அவன் சந்தேகம் மேலும் வளர்ந்தது. உள்ளே நுழைந்த பாஸ்கரின் முன்னே தேநீர்த் தட்டை நீட்டியவாறே "அத்தான்!...தம்பி ரவி இங்கிலாந்திலிருந்து திரும்பி விட்டார். இங்கே வந்திருந்தார்...குழந்தை ராஜிக்கு நிறைய விளையாட்டுச்சாமான்கள்..." முடிக்கவில்லை. தேநீர்த்தட்டு பறக்கும் தட்டாகியது. ஜெயாவின் கன்னங்களை பாஸ்கரின் பெரிய கைகள் பதம் பார்த்தன. 'ரவி உன் தம்பியா!... இல்லை!...காதலனா!...அதற்குப் பதில் சொல் முதலில்!" கர்ச்சித்தான் பாஸ்கர். "அத்

[மறுபக்கம் பார்க்க]



## மகளிர் மன்றம்

### அன்புநிறை சோதரிகளே! அஞ்சலி!......

யேசுவின் மறைந்த வாழ்வை நாம் நினைவுகூரும் நாட்கள் இவை; யேசு இவ்வுலகில் வாழ்ந்த முப்பத்து மூன்று வருடங்களுள் மூன்று வருட காலமே அவரது பிரசித்த ஜீவியமாக இருந்தது. மிகுதிகாலம் எல்லாம் நசரேத்தென்னும் சிற்றூரின் சிறிய வீட்டிலே மறைந்து வாழ்ந்து வந்தார். "அவர் முப்பதாம் பராயம் மட்டும் அவர்களுக்கு அமைந்து நடந்து வந்தார்" என்ற வாக்கியங்கள் மட்டுமே இவ்வமைதி வாழ்க்கையை சுவிசேஷத்தில் சித்திரித்துக் காட்டுகின்றது: இவ்விதமாக ஆடம்பரமற்ற, அமைதியான வாழ்வின் மேன்மை நிலையை எம்மவர்க்குப் படிப்பிக்கச் சித்தமானார் நம் யேசு:

இதே மறைந்த வாழ்வைத்தான் புனிதர்களும் பின்பற்றி வாழ்ந்து வெற்றி முடி சூடினர் என்றால் அது மிகையாகாது. குழந்தையேசுவின் சிறிய புஷ்பமான சின்னத் திரேஸாள் "எவராலும் அறியப்படாமலும், சிநேகிக்கப் படாமலும் இருக்க விரும்பு" என்ற வார்த்தைகளையே தன் விருது வாக்கியமாகக் கொண்டாள் லூர்துபதிக் காட்சி பெற்ற புனிதை பெர்ணதேத் அம்மாள் உலகில் பிரபல்லியம் அடைந்தபின்னர் கன்னிகாமடத்துச் சுவர்களிடை மறைந்த வாழ்வை வாழ்ந்தமையிட்டு விசாரிக்கப்பட்ட பொழுது, "விளக்குமாற்றைக் கூட்டும்பொழுது மட்டும் எடுத்துப் பாவிப்பார்கள். அப்புறம் அதை எவ்வளவு மறைவாக வைக்க முடியுமோ அவ்வளவு மறைவான இடத்தில் வைத்து விடுவார்கள். அதேபோல தேவமாதாவும் தம்மை உலகுக்கு அறிவிக்க என்னை ஒரு கருவியாகப் பாவித்த பின்னர் என்னை இம்மடத்திலே ஒதுக்கி வைத்துள்ளார்" என்று முகமலர்ச்சியுடன் கூறினாள்.

சோதரிகளே! ...... அமைதியான, மறைந்த வாழ்வென்பது இக்காலத்தில் எல்லோராலும் விசேடமாகப் பெண்களாலும் வெறுத்தொதுக்கப்படும் விஷயமாக இருக்கின்றது. ஆயின் இதுவே ஈடேற்றமடைவதற்கு உத்தமவழி. அது மட்டுமல்ல பெண்களாகிய எமக்கு மிகச்சிறந்ததும், மிக மிக வேண்டியதுமான வாழ்வாகும். எனவே, ஆடம்பரமற்ற அமைதியான வாழ்வின் மேன்மையை உணர்ந்து அதை விரும்பிக் கடைப் பிடிப்போமாக.

— ரோஜா

## சிக்கனமாகவே வாழ்வோமடி!...

கும்மியடி எங்கள் குடும்பநல் வாழ்வினிற்
குறைவிலாச் செல்வமே நிறைந்திடவே
நம்மவர் இன்புற நல்வழி வகுத்திட
நாளுமே சிக்கனம் நாடிடுவோம்! ......
கும்மியடி! ..... கும்மியடி!......

I

ஆடம்பர வாழ்வை அரியவையர்நாம் நீக்கி
அறநிறை சிக்கனம் பேணிடுவோம்! ..
நாடும் பயன்தரும் நற் சேமவங்கியில்
நாளுஞ் சிறுதொகை தேக்கிடுவோம்! . ...
கும்மியடி! ..... கும்மியடி!... ..

II

காய்கனி பயிரிட்டும் கைப்பணி மிகச் செய்தும்
கண்கவர் நூலிழை வேலை செய்தும்
பாய்பெட்டி பின்னியும் பசுவினம் வளர்த்துமே
பல்வழியிற் பணம் சேர்த்திடுவோம்!.. ... .
கும்மியடி!...... கும்மியடி! ..

III

அன்னையர் "பிடியரிசி" சேர்த்திடலாம்
அன்புத் தங்கையர் கோழிகள் வளர்த்திடலாம்
சின்னஞ்சிறுமியும் சல்லிமுட்டி வைத்தே
சின்னக் கையால் காசு போட்டிடலாம்! . . .
கும்மியடி!...... கும்மியடி!......

IV

கடன் தொல்லை நமக்கில்லை; கைநீட்டி இரந்திடும்
கஷ்டநிலையும் வருவதில்லை;
உடனடியாகவே சிக்கன முறையிலே
உழைப்பின் பயனெல்லாம் தேக்கிடுவோம்! . . .
கும்மியடி!... . கும்மியடி!.. ...

V

சின்னஞ் சிறார்களின் கல்விச் செலவுக்கும்
சிறப்புற இல்லங்கள் அமைத்திடவும்
கன்னிப் பெண்களானோர் கல்யாண வாழ்வுக்கும்
கண்டிடுவோம் வழி சிக்கனத்தில்!......
கும்மியடி!...... கும்மியடி!... ..

IV

நம்மில்லம் செழித்திடும்; நம் மூரும் செழித்திடும்
நம்மிலங்கைத் தீவும் செழித்திடுமே
அம்மம்மா! ... சிக்கன வாழ்க்கையின் மேன்மையை
அளவிட முடியுமோ!..... கும்மியடி! ....
கும்மியடி!...... கும்மியடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தவர் வருமளவும் பிரிந்திருப்பதா?

(தூய பேதுரு ஆலயத்தில் நடைபெற்ற வருகைக்கால கூட்டுப் பிரார்த்தனையில் வண. பிதா எஸ். ஜே. இம்மானுவல் அவர்களது அருளுரையின் சாரம்)

அகிலம் முழுவதும் அக்களிப்புடன் கிறிஸ்துவின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது. கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவர்களும் தத்தம் முறையிலே இப்புனித நாளைத் திருநாளாகவும், பெருநாளாகவும் கொண்டாடுகின்றனர். உலக மக்கட்குக் கிறிஸ்துவின் பிறப்பு ஒரு கடந்தகால சரித்திர சம்பவம் (Historical event). கிறிஸ்து என்னும் மெசியாவை உலகம் எதிர்பார்த்திருந்த காலமொன்று இருந்தது உண்மை. எதிர்பார்த்த மெசியா தோன்றிய நாளொன்றும் இருந்தது உண்மை. ஆனல் இவை நடந்து முடிந்த கடந்தகால சம்பவங்கள். உலகம் சரித்திர கீர்த்தி பெற்ற பெரியார்கட்கு நினைவு விழா எடுப்பது வழக்கம். புத்த பெருமானுக்கு ஒரு ஜெயந்தி; காந்தியடிகளுக்கு ஒரு நூற்றாண்டுவிழா; நாவலருக்கு ஒரு ஞாபகார்த்தம்; இந்த விதத்திலே கிறிஸ்துவுக்கும் ஒரு விழா எடுக்கின்றது.

ஆனல் கிறீஸ்தவர்களுக்கோ கிறீஸ்துவின் பிறப்பு ஒரு வெவெறும் நினைவுநாளாக மாத்திரம் இருக்கமுடியாது. இந்நாளை இவ்வுலகத்தில் தோன்றிமறையும் பெரியார்களுடைய நினைவு விழாக்களுடன் கணிக்கவும் கூடாது; இணைக்கவும் கூடாது. இது சரித்திரத்தில் நிகரற்ற ஒரு தனிப் பெரும் நாள். இன்னுமோர் இறைவன் பிறப்பு நிகழ்வதற்கில்லை.

கிறிஸ்துவின் பிறப்பு ஒரு குறிக்கப்பட்ட காலத்திலே, ஒரு குறிக்கப்பட்ட குலத்திலே, ஒரு குறிக்கப்பட்ட குடும்பத்திலே நடந்த சம்பவமாயிருந்தாலும் எக்காலத்தையும் எல்லா நாட்டையும், எல்லா மக்களையும்வூடுருவும் சம்பவமாய்த் திகழுகின்றது. இது ஒரு கடந்தகாலச் சம்பவம் என்றுற்போல் அதன் முக்கியத்துவம், உண்மை, வன்மை, கருத்து, பொருத்தம் இவையொன்றும் குன்றிப் போகவில்லை. எதிராக, அன்றும் இன்றும் என்றும் எல்லோர்க்கும் அதுஒரு சீவிக்கும் பிரசன்னமாக (living Presenec) இருக்கின்றது. இப்படியாகக் கடந்தகாலச் சம்பவமொன்று நிகழ்காலமனிதருக்கு ஒரு சீவிக்கும் பிரசன்னமாக இருப்பதற்குப் பலகாரணங்களுண்டு.

இறைவன் மனிதன் உறவாடுதலிலே, மனுஷீக போர்வையிலே தெய்வீக கொடைகள் பல வழங்கப்படுகின்றன. கிறிஸ்துவின் பிறப்பு, அவரின் பாஸ்காப்பலி, அவரின் மரணவெற்றி இவையெல்லாம் மனுவுருவெடுத்த மாபெரும் மறைபொருட்கள். இவைகளின் உண்மையும் வன்மையும் நன்மையும் காலத்திற்கு மேற்பட்டவைகள். எல்லா இடத்திலும், எல்லாமக்கட்கும், எல்லா இடத்திலும் பிரசன்னப் படுத்தக்கூடிய தன்மையுடையன.

ஆனல் கிறிஸ்துவின் பிறப்பு விழா இன்றைக்கும் ஒருசீவிக்கும் பிரசன்னமாக இயங்குவதற்கு இன்னுமோர் விசேட காரணமுண்டு. கிறிஸ்துவின் முதல்வருகை ஒரு தனிப்பெரும் சம்பவமான உண்மை. ஆனல் அது தன்மட்டிலே தனித்துநிற்கும் சம்பவமல்ல. கிறீஸ்துவின் முதல்வருகையும் அவரது இரண்டாம் வருகையும் இன்றியமையாத முறையிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் நாங்கள் கொண்டாடும் கிறீஸ்து ஜயந்தி இருவருகைகளையும் ஒன்ருக இணைக்கும் ஜயந்தியாகும். மலைகளுக்குள் மறைந்திருந்த பெத்லகேமில் நடந்தசம்பவத்தின் ஒளியும், மாட்சியுடன் வரவிருக்கும் கிறிஸ்துவின் ஒளியும் ஒன்றுகலக்கும் விழாவே கிறீஸ்து ஜயந்தியாக அமைகின்றது.

ஆகையினல் கிறீஸ்து ஜயந்தியின் தகுந்தவித அனுசரம் எம்மிடமிருந்து இரு வருகைகள் மட்டிலும் சமமான விசுவாசத்தைக் கோருகின்றது. இவ்விரு வருகைகளைக்கொண்டுதான் கிறீஸ்தவன் தனது வரவிலக்கணத்தைப் பெறுகின்றான். வந்தகிறீஸ்துவில் பிறந்து வரவிருக்கும் கிறீஸ்துவை நோக்கிச் செல்பவன்தான கிறீஸ்தவன். இவ்விதமாக இரு வருகையில் இணைக்கப்பட்டவன் கிறீஸ்தவன்என்ற சத்தியம், இன்று ஒரு சாதாரண சத்தியமாக இருப்பதில்லை. அது ஒரு சவால் கொடுக்கும் சத்தியமாக (a truth that is challenging) வருகின்றது. கிறீஸ்துவின் முதல்வருகையில் ஒன்ருக ஊற்றெடுத்தோர், ஒன்ருக அனுப்பப்பட்டோர், அதே கிறீஸ்துவின் இரண்டாம வருகையை ஒன்ருக எதிர்பார்க்கின்றனர். ஒன்ருக அதற்கு ஏங்கி நிற்கின்றனர். கிறீஸ்துவின்பிறப்பில் ஒள்ருகப் பிறந்தவர்கள், கிறீஸ்துவின்மாட்சிமை வருகையில் ஒன்ருக வரவேற்பவர்கள் இன்று எப்படி இருக்கின்ருர்கள்.

கடந்தகால சம்பவமொன்று (கிறீஸ்துவின் பிறப்பு) அவர்களை இணைத்தது. இறுதிக்கால சம்பவம் (மாட்சிமையின் வருகை) அவர்களை இணைக்கின்றது. ஆனல் பரிதாபம்; இடைக்கால சம்பவங்களோ அவர்களைப் பிரித்து விட்டது. இறைவன் இணைத்ததை மனிதன் பிரித்துவிட்டான்.

ஆகையினல், வந்தவர் வருமளவும் பிரிந்திருப்பதா? அல்லது வருபவரின் மாட்சிக்காக இணைந்திருப்பதா?

# ஆறும், ஒன்பதாம் கற்பனைகள்

(இராமை சூ. மிக்கேல்ராஜ்)

### தேனீக்களைப்போல் வாழ்வோம்:

காலமெல்லாம் வேசியின் வீட்டில் இன்பம் நுகரும் மனிதனும்கூட, தன் மனைவி அணுவளவும் மாசு அடைந்தவளாய் இருக்கக்கூடாது என்றுதான் எதிர்பார்க்கிறுன். தான் எப்படியும் வாழலாம், ஆனல், தன் மனைவி மட்டும் முறைப்படி கற்புநெறியில் வழுவாமல் வாழ வேண்டும் என்று விரும்புகிறுன். தான் செய்யும் பிழையைத் தன் மனைவி எண்ணிக்கூடப் பார்க்கக் கூடாது என்று எதிர்பார்க்கிறுன். தான் செய்தால் குற்றமல்ல; மனைவி செய்தால்தான் குற்றம் என்று கூறவும் துணிந்துவிடுகிறுன. குற்றம் யார் செய்தாலும் குற்றம் குற்றம் தான்! ஆண் செய்தால் குற்றமல்ல; பெண் செய்தால் குற்றம் என்பது அநீதியாகும்.

கட்டிய மனைவியோடு இல்லறத்தை இனிதுடன் நடத்துபவன் தேனீக்கு ஒப்பாகவும், கட்டிய மனைவி இருக்கக் கண்டவளோடு உறவு கொள்பவன் ஈக்கு ஒப்பாகவும் கருதப்படுகிறுன். ஈயானது மிட்டாய்க் கடையில் வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களின்மேல் சில சமயங்களில் அமருகிறது. ஆனல், அதே வழியில் நரகலைக் கூடையில் சுமந்துகொண்டு ஒரு தோட்டி சென்ருல், அந்த ஈ உடனே தின்பண்டத்தை விட்டு அந்நரகல்மீது அமருகிறது. தேனீயோ தேனைக் கிரகிக்கும்பொருட்டு மலர்ந்த பூக்களில் அமருமே தவிர, அருவருக்கத்தக்க பொருள்களின்மேல் அமருவதில்லையே!

ஆகவே, உடல் இன்பத்தைப் பொறுத்தவரையில் நாம் ஈக்களைப்போல் இல்லாமல் தேனீக்களைப்போல் வாழ்வோம்.

### தூய ஆவியானவருக்கு விரோதமான பாவம்:

'கெட்ட செயல்' என்று பொதுவாகக் கூறும்போது தவருன முறையில் ஆணும்—பெண்ணும் சேர்ந்து உடல் உறவு கொள்வது மட்டும் தான் என்பதில்லை. விலக்கப்பட்ட உடல் இன்பச் சேட்டைகளை அது எந்த முறையாக இருந்தாலும் தனியே (ஆணாயினும், பெண்ணாயினும்) மேற்கொண்டாலும் அதுவும் கற்புக்கு விரோதமான பாவச் செயல் தான். இத்தகைய செயல் இயற்கைக்கு முரணான மிருகச் செயலாக இருப்பதால், அது தூய ஆவியானவருக்கு விரோதமான பெரும் பாவமாகவும் கருதப்படுகிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். எனவே, சிற்றின்ப உணர்ச்சியை எழுப்பும் எந்தச் செயல்களையும் நாம் விலக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்பதையும் ஒருபோதும் மறத்தலாகாது.

### இன்றைய இளம் உள்ளங்கள் ஒழுக்கத்தில் உயர்

இன்று நாட்டில் ஆண்களும், பெண்களும் படித்து முன்னேறிச் சகலதுறைகளிலும் பணியாற்றி வருவதை நாம் காண்கின்ருேம். ஒரு காலத்தில் கல்வித்துறையில் பின்தங்கியிருந்த நம் தமிழ்ச் சமுதாயம், இன்று கல்வித்துறையில் பெரிதும் முன்னேறி வருவது குறித்து நாம் ஒருவிதத்தில் பெருமைப்படவேண்டியவர்களாக இருந்தபோதிலும், இன்னெரு விதத்தில் கல்வி அறிவினல் மாணவ மாணவிகளின் ஒழுக்கம் உயருவதற்குப்பதில் சிதைந்து காணப்படுகிறதே என்பதை எண்ணும்போது நாம் வேதனைப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிருேம்.

'முன்னேற்றம் — முன்னேற்றம்' என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் நாம், உண்மையில் எதைப்பற்றி இவ்வாறு கூறுகிருேம் என்பது நமக்குப் புரியாத பெரும் புதிராக உளது. பள்ளி மாணவ மாணவிகளிடையேயும் குறிப்பாகக் கல்லூரி மாணவ மாணவிகளிடையேயும் இன்று ஒழுக்கம் பெரும்பாலும் சிதைந்தே காணப்படுகிறது. 'முன்னேற்றம்' என்று நாம் கூறுவது ஒழுக்கக்கேட்டைத்தான். இவ்வாறு 'முன்னேற்றம்' என்ற பெயரில் அழைக்கிருேமோ என்னவோ? ஒரு காலத்தில் ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் உயர்ந்து விளங்கிய நம் மாணவ சமூகம், இன்று ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் பின்னேக்கிச் சென்றுகொண்டிருப்பதை எவராலும் மறுக்க முடியாது!

1968ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம், இலங்கையைச் சேர்ந்த பள்ளி ஒன்றில் மாணவிகளிடமிருந்து ஒரே நாளில் 26 காதல் கடிதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். இதிலிருந்து இன்றைய இளம் உள்ளங்கள் எந்த அளவுக்கு அழிவுப் பாதையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிருர்கள் என்பது நமக்கு நன்கு தெளிவாகிறது இல்லையா? "வயதடைந்த நாள் தொட்டுத் திருமணம்வரை பெண்ணுக்குரிய பருவம் மிக நெருக்கடியானது; சோதனைக்குரியது. அக்காலத்தில் தன்னைக் காத்துக்கொள்ளும் பெண்ணே பின்னைப் பெருந்தேவியாவாள்" என்று பெண்ணைப்பற்றித் திரு. வி. க. வும் கூறுகிருர்.

ஒரு 20 ஆண்டுகளுக்கு முன்பு மாணவ மாணவிகளிடம் எவ்வளவு ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிகுந்திருந்தது. பொழுது போக்கு மன்றங்களிலும், சினிமாக் கொட்டகைகளிலும் இன்று நாம் விடுமுறைத் தினங்களில் ஏராளம் மாணவ மாணவிகளையும் காண்பதுபோல, அன்று நாம் கண்டோமா? இல்லையே! அன்றைய மாணவ மாணவிகள் பள்ளிப் படிப்போடு ஒழுக்கம் — கட்டுப்பாடு என்ற கல்விகளையும் சேர்த்துக் கற்கவும் தவறவில்லை.

எந்த அளவுக்கு ஒரு மாணவன் கல்வியில் முன்னேற்றப் பாதையை நோக்கி விரைந்து

தொடர்ச்சி 3-ம் கலம்

### ஆறும், ஒன்பதாம்...

5-ம்கலத் தொடர்ச்சி

கொண்டிருக்கின்ருனே, அந்தஅளவுக்கு அவன் ஒழுக்கத்திலும்முன்னேறிக்கொண்டேசெல்லவேண்டும். ஆகவே தான் நம்வள்ளுவரும்,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

—என்ருர்.

ஒருவன் எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தபோதிலும், அவனிடம் ஒழுக்கம் இல்லையென்ருல், அறிவாளியாக இருந்து என்ன பயன்? அரும்புகள் அனைத்தும் மலர்ந்து மணம் வீசுவதில்லை. ஏதோ ஒரு சில அரும்புகள் தாம் மலர்ந்து மணம் வீசுகின்றன. மனிதர்களிலும் அநேகர் அரும்புகளாகப் பிறக்கிருர்கள்; அரும்புகளாக வாழ்ந்து அழிகிருர்கள். அரிதாக எங்கோ சில மலர்கள் மலர்கின்றன. மலர்ச்சி கண்ட மனிதர்களை மேதைகள் என்கிருேம், மகான்கள் என்கிருேம், ஞானிகள் என்கிருேம். உண்மையிலே ஒழுக்கமுடையவர்கள் தங்கள் மனதால்கூட எந்தவித தீய எண்ணத்துக்கும் இடம் கொடுக்கமாட்டார்கள்.

## சந்தேகப் புயலி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தான்...ரவி...என் தம்பியே தான்!"...."சட்அப்!... கல்யாணவாழ்வின்முன் நடந்த காதல் நாடகத்துக்கு மூடுதிரை போடாதே!...பெண்களே...அத்தனை பேரும் வேஷக்காரிகள்"...மீளவும் அவள் மெல்லியஉடல் அவன் கைகளின் வேகத்தில் கன்றியது.

அன்றிலிருந்து பாஸ்கர்—ஜெயா வாழ்வு போர்க்களமாகியது. நித்தம் ஒரு சண்டை. ராஜிக்கு இதைப்பற்றி எதுவுமே தெரியாது. ஓர் நாள் பாடசாலையிலிருந்து திரும்பியவள் அண்ணு அண்ணியைப் போட்டு வதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் துணுக்குற்ருள். "அண்ணு! நீ ஏன் அண்ணியை அடிக்கிறே" அழுகையோடு கேட்டாள். "உன் அண்ணியா! அவள் ரொம்பக் கெட்டவள்; அதனல்தான்..." "என்ன... அண்ணு!...அண்ணி ரொம்ப ரொம்ப நல்லவள். அவளைப் போட்டு அடிக்கிறயே. நீ தான் ரொம்பக் கெட்டவன்" ...பிரசங்கம் வைத்தாள் சிறுமி ராஜி.

(தொடரும்)

## வட அயர்லாந்தில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உதவியாளர் வரிசையிலும் சில கத்தோலிக்கர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. கலகங்கள் நடந்ததன் காரணம் கத்தோலிக்கர் நீதியாக நடத்தப்படவில்லை என்பதே.

## நன்றித்துதி

"யேசுவின் திரு இருதய இரக்கத்தாலும், சதா சகாய மாதாவின் மனருட்டாலும். சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்ருட்டாலும் என் பிள்ளைக்கு வந்த வியாதி குணமானது.

நேர்த்தியின்படி இதை பிரசுரிக்கிறேன்.

கம்பளை மாதாவின்
5/70 அடியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**1970 — தை மாதம்**

| | | | |
|---|---|---|---|
| 25 | ஞாயிறு | வருடத்தின் 3-ம் ஞாயிறு | [ப] |
| 26 | திங்கள் | புனித பொலிக்காப் | [சி] |
| 27 | செவ்வாய் | புனித கிறிசோஸ்தம் | [வெ] |
| 28 | புதன் | தினப் பூசை | [ப] |
| 29 | வியாழன் | புனித பிரா. சேல்ஸ் | [வெ] |
| 30 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 31 | சனி | புனித யோண் பொஸ்கோ | [வெ] |

# சத்தியவேத பாதுகாவலன்

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

கிறிஸ்தவமக்கள் ஒன்றுதிரண்டு தம்மிடையேயுள்ள வேற்றுமைகளை நீக்கியருளுமாறு இறைவனை நோக்கிப் பிரார்த்திக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரமானது வத்திக்கான் சங்கத் தீர்மானத்தின்பின் 5-ம் வருடமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த ஐந்து வருடங்களிலும் கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம் எவ்வளவு வலுப்பெற்று முன்னேறி வந்துள்ளது என்பதை நோக்கும்போது நாம் வியப்படையாமலிருக்க முடியாது. இறைவனது கரம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை இதிற் காணக்கூடியதாயிருக்கிறது. அடிப்படையான சமயக் கோட்பாடுகளில் ஒன்றிப்பு தூய ஆவியானவராலேயே ஏற்படக்கூடிய தொன்றாகும். இந்தக் கருத்துக்காகவே மக்களுடைய செபம் அவசியம். கிறிஸ்தவ ஒன்றிப்பு மனிதனால் ஆகக்கூடியதல்ல; அது இறைவனின் செயல். ஆனால் மனிதரது ஒத்துழைப்பு அதற்குத் தேவை. ஆகவேதான் பிரிவுற்ற இறைவனது குடும்பம் திரும்பவும் ஒன்றுபடுமாறு இவ்வாரத்தில் விசேஷ பிரார்த்தனை செய்வதோடு அவ்வழியில் எம்மாலான செயலிலும் இறங்குவதற்கு இதுவே தருணம்.

நாம் கிறிஸ்துவின் திரு இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள்; அவருக்காகச் சாட்சி பகரவேண்டியவர்கள். கிறிஸ்தவரிடையே பிளவுகள் இருக்கும்வரை அவர்களிலே பிறர் கிறிஸ்துவைக் காண்பது துர்லபம். ஆகவே, கிறிஸ்துவுக்கு உலகையும், உலகுக்குக் கிறிஸ்துவையும் அளிக்க வேண்டுமானால் கிறிஸ்தவரிடையே ஒருமைப்பாடு இருக்கவேண்டியது அவசியமாகும்.

உண்மை யாராவது ஒருவருடைய ஏகபோக உரிமை அன்று. பிறரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உண்மைகளும், கண்டுபாவிக்க வேண்டிய விஷயங்களும் எவ்வளவோ இருக்கின்றன.

இன்று புதிய நம்பிக்கை ஊற்றெடுக்கிறது. முன்னெப்போதுமில்லாத நம்பிக்கையுடன் நாம் செபத்திலும் செயலிலும் ஈடுபட்டிருக்கிறோம். எத்தனையோ இடையூறுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. இரு தரப்பிலும் மலையென நின்ற பழைய கோட்பாடுகள் பல தகர்ந்துவிட்டன. பரஸ்பர அன்பும், மதிப்பும், நம்பிக்கையும் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு கிறிஸ்தவ சபைகளிடையே நிலவி வருகின்றன. ஒற்றுமைக்கு அடிகோலுவதில் அத்தியாவசியமாக இருக்கும் நல்லெண்ணத்தை சாதாரண மக்களிடையே வளர்ப்பது ஒற்றுமை இயக்கத்தின் பணியாகும். பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த பிரிவினைகளைச் சில உரையாடல்களினால் நீக்கிவிட முடியாதென்பதை யாவருமுணர்வர். ஆனால் இறைவனின் திருவுளம் பிரிவினைகள் இன்றி தம் வழியைப் பின்பற்றும் மக்கள் அனைவரும் ஒன்றாக விளங்கவேண்டுமென்பதே. தமது சித்தம் நிறைவேறுவதற்குப் போதிய அருங்கொடைகளை அவர் அருளுவார் என்பது திண்ணம்.

---

எவ்வளவுநாள் வாழ்ந்தோம் என்பது அல்ல வாழ்க்கை. எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் உண்மை வாழ்க்கை.

* * *

அழகியமுகம் ஒருவரை வசீகரிக்கும். ஆனால் அவரின் அன்பான பேச்சு ஒருவரை அடிமை கொள்ளும்.

* * *


பேசாத வார்த்தைக்கு நீ எசமான். பேசிய வார்த்தை உனக்கெசமான்.

— ஆபிகாம் லிங்கன்

# அன்பு கனிந்த அமலனின் காணிக்கை

( ஆசிரியர் F. S. C. வங்காலை.)

எழில்மிக்க எஜிப்து நாட்டிற் பார்புகழும் பாரவோன மன்னன், இஸ்ராயேலரை இன்னற் படுத்தி அடிமைகளாக்கி ஆட்சிபுரிந்து வருங்காலை, இறைவன் இஸ்ராயேலர் மீது மிகுந்த கருணை கூர்ந்து இரவினிலே எஜிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளைத் தவறுதுகொன்றழித்து மோயீசனின் ஒண்பிரம்பால் செங்கீர்க் கடல் பிரித்துச் சிறுவழி நடத்தி அவர்களுக்குத் தேனும் பாலும் பொழியும் கானான் நாட்டை நற்பரிசாய் நல்கினர்.



கருணைத் தெய்வம் காண்பித்த களிவிரக்கத்தைக் கருத்தில் வைத்து யூதகுலமக்கள் என்றும் குன்றா நன்றியை ஈஸ்வரன் தமக்குச் செய்ய வெண்ணி தங்குலத் தலைச்சன் பிள்ளைகளைக் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தி மீட்கும் கடமையில் முறை பிறழாது ஒழுகிவந்தனர்.

யூதகுலக் கன்னிமாமரியும் சூசைமாமுனிவரும் மோயீசனின் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றற் பொருட்டு யேசு பாலனை இறைவனுக்குக் காணிக்கை கொடுக்கப் பேர் பெற்ற பெத்திலகேம் ஊரிலிருந்து இணையில்லாப் புகழ் மிக்க யெருசலேம் நகருக்குச் செல்ல எண்ணினர்.

வானகமிருந்து அணியணியாக வந்த வானவர் மகிமை மிகு யேசு பாலனின் மலரடி தொழுது இன்னிசைப் பண் பாடி மலர்மாரி பொழிந்து வழியனுப்பத் தேவதாயும் திருக்குமாரனோடு சூசைமாமுனிவர் துணையுடன் திருயாத்திரை செய்யத் தொடங்கினர்.

குறிஞ்சி நிலக் குன்றுகளினூடே வளைந்து வளைந்து செல்லும் அருவிநீர் சூழும் செழுமைமிகு அழகுவள நிலங்களையும், வளமுறு முல்லை நிலத்தே தளிர்விடும் தருக்கள் சூழும் தேன் பொழியும் சோலைகளையும், மருதநிலமிசைச் செழுமைமிக்க செந்தெற் கழனிகளையும் கண்டு களித்தனர்.

ஈற்றில், வளமிகு நாட்டில் வளரும் தீங்கனிச் சோலைகளையும் பொன்மதில் சூழும் புகழ் மிகும் ஆலயக் காட்சியுடன் மிளிரும் இணையில்லாப் புகழ் மிக்க யெருசலேம் நகரையும் கண்டு களிபேருவகை கொண்டனர்.

அன்னை மரியும் அவர் நற்றுணைவர் சூசைமாமுனிவரும் அன்புகனிந்த காணிக்கை செலுத்த அமலன் யேசுவோடு ஒளிவீசும் நவமணிகள் பதித்து உயர்ந்தோங்கிச் சிறப்புடன் விளங்கும் யெருசலேம் ஆலயம் சென்றனர்.

சிமியோன் முனிவர் பாவிகளைப் பாவத்தினின்றும் மீட்கப் பரமசுதன் பாரினிற் பிறக்கும்போது தமதிரு கண்மணிகளாலும் கண்டுகளிகூரும் பாக்கியம் பெறப் பரமபிதாவின் தேனூறு மலர்ப் பாதங்களைத் தினமும் பணிந்து பக்திபரவசத்துடன் செபதவம் புரிந்து தவறாது தொழுதுவந்தார்.

“அலைகடலகத்தே தோன்றும் வலம்புரிச் சங்குபங்கயம் மலரும் பசிய நீர்த் தடாகத்தே தவறிப் பிறப்பது போன்றும், நீரிலே தோன்றும் நீலோற்பவமலர் அதன் இயல்பு தவறி மலையின் உச்சியில் மலர்வது போன்றும், களங்கமற்ற ஒரு கன்னியின் உதரத்தே தேவசுதன் அற்புதமாய் உற்பவித்துப் பிறப்பார். அன்று உன்கண்மலரக்கண்டு களிகூர்வாய்” என்று கடவுள் கனிவுடன் கூறிய வார்த்தையைச் சிந்தையிலெண்ணிய சிமியோன் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் அறிந்த அக்கோமே யெருசலேம் ஆலயம்வந்து களிப்புறும் தமதிருகண்களாற் கடவுட் திருமகவைக் கண்டனர்.

வான்தக்ஷைத தந்த மைந்தனின் தேன்மலர்ப்பாதங்களைத் தன் தலைமேல் வைத்துப் பொன்னெனப், பூவென, அழகுமிகும் அணியெனப் பேரின்பநிழலெனப் போற்றிப் புகழ்ந்தார். தேவகுமாரனின் சிறுபாதங்களைக் கண்களின் நீரினாற் கழுவி அருளென்னும் புதிய ஆடையினாற் துடைத்துத் தமதிருகண்மணிகளாலும் பாலகனின் கட்டழகை அள்ளிப்பருகி அன்பெனும் இன்பச்சுவையோடு பேரின்பக் கனியருந்தி, நித்திய ஆனந்தக்கடலில் நீந்தினர். அன்றியும் அருளுறும் குழந்தையைக் கரங்களிலேந்தி அரவணைத்து மார்புறத் தழுவி வீணையொடு வேய்ங்குழலும் யாழும் இசைபாட விண்ணரசைத் துதித்துப் ‘பாற்கடலிலெழுந்த பங்கயம் போன்று எனது இதயத்தாமரை இன்புற்றுமலர வேத நூல்களோதும் விண்ணரசாம் நீ உன் கண்மலர்களால் நித்திலம் போன்ற நீர்த்துளிகளைத் துன்பத்தினாற் சொரியவந்தாய்; யாம் உமக்குச் சோகத்தை விளைவிக்கும் பாபத்தைப் புரிந்தோம்; என்கண்மலர்கள் இன்பமிகுதியால் முத்துக்கள்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## புதுமைத் தாயே!

தங்கமணித் திருமகுடம் சிரசில் மின்னத்
தரளமுற ஒளிநிலவும் பைம்பொன்மாலை
செங்கரத்தில் மின்ன மலர்க் கமலபாதம்
சிங்காரச் சிறுபிறையின் நிலவுமின்ன
அங்கமெலாம் கற்பினலங் காரம் மின்ன
அழகொளிர்பட் டாடைதனில் அருணன்
மின்ன
பொங்குதனி அன்பினெழில் வதனம் மின்னப்
பொழிந்திடுவாய் அருள்மாரி புதுமைத்தாயே!

●

இன்னிசையின் கீதவளம் எங்கும் பொங்க
இதயமெலாம் கருணையலை எழுந்துபொங்க
அன்னை எமதன்னை மரியன்னை என்றே
அடியார்கள் வாழ்த்துமொலி அருவிபொங்க
இன்னலொழிந் தின்பமிரு நிலத்திற் பொங்க
இணையில்லாப் பேரின்பக் கண்ணீர்பொங்கப்
பொன்னின் அரியாசனத்தே செங்கோ லேந்திப்
பொழிந்திடுவாய் அருள்மாரி புதுமைத்தாயே

●

விண்ணதிர மணியிரட்ட வெடிக ளார்ப்ப
விரைகமழுந் தென்றலிளங் கவரிவீச
எண்ணரிய தூதர்தமிழ் யாழை மீட்டி
இணைமலர்த்தாள் அஞ்சலிக்க ஏகோபித்து
மண்ணகத்தோர் திரண்டெழுந்து மரியாள்
என்னும்
மாசறியாத் திருநாமம் மகிழ்ந்து போற்றப்
புண்ணியமே உலகமெலாம் பூத்து நிற்கப்
பொழிந்திடுவாய் அருள்மாரி புதுமைத்
தாயே!

யாழ்—“ஜெயம்”

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்திற் 1970 ஆம் ஆண்டு தை மீ 24ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : “கதலிக் பிறஸ்” யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் : 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org